සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணை பரீட்சை - 2026
**Third Term Test**

| ශ්‍රේණිය / தரம் / Grade | 13 | විෂයය / பாடம் / Subject | இஸ்லாமிய நாகரிகம் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I | පැය / மணித்தியாலம் / Hours | 2 |
|---|---|---|---|---|---|---|---|

**அறிவித்தல் …**

01 திருமறையின் தோற்றுவாய் என்ற நூலின் ஆசிரியர்
(1) மௌலானா மௌதூதி (2) மௌலானா அபுல்கலாம் ஆசாத் (3) மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி
(4) கலாநிதி யூஸுப் கர்ழாவி (5) இமாம் ஹஸனுல் பன்னா

02 Religion என்ற சொல் re-legree என்ற இரு சொற்களில் இருந்து பிறந்தது என்று கூறியவர்
(1) காந்தி (2) கொம்டே (3) சிஸ்ரோ
(4) இப்னு ஸீனா (5) கிந்தி

03 கி.மு 3500 முதல் 1500 வரை சிறப்புற்று விளங்கிய நாகரிகம்
(1) மெஸபதேமிய நாகரிகம் (2) எகிப்திய நாகரிகம் (3) இந்து நாகரிகம்
(4) கிரேக்க நாகரிகம் (5) உரோம நாகரிகம்

04 இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பங்கரகம்மான பிரபல்யமடையக் காரணம்
(1) இலங்கையில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்ட முஸ்லிம் வியாபாரிகளின் கோட்டையாக இருந்தது
(2) மன்னனைப் பாதுகாக்க அவ்வூர் முஸ்லிம் பெண் ஒருத்தி தன்னுயிரைத் தியாகம் செய்தாள்
(3) இலங்கை மன்னன் அராபியவர்களுக்கு சிங்களப் பெண்களை திருமணம் செய்து வைத்த இடம்
(4) எமது முன்னோர்களின் கல்லறைகள் அங்கே அதிகமாகக் காணப்படுகின்றன.
(5) ஒருகாலத்தில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த ஒரு பிரதேசம்

05 செல்ஜுக், புவைஹி எனும் சிற்றரசுகள் எந்த ஆட்சிக் காலத்தில் தோற்றம் பெற்றன,
(1) கிலாபதுர் ராஷிதா (2) உமையா கிலாபா (3) அப்பாஸிய கிலாபா
(4) மொகலாயப் பேரரசு (5) உஸ்மானிய கிலாபத

06 பின்வரும் கூற்றுக்களில் முஸ்தபா கமால்' அதாதுர்க்கிற்கு பொருத்தமான கூற்று

(1) நவீன இஸ்லாமிய பேரரசை நிறுவியவர்
(2) மேற்கிற்கும் கிழக்கிற்கும் இணைப்பை ஏற்படுத்தியவர்
(3) இஸ்லாமிய கிலாபத்தின் வீழ்ச்சிக்குக் காரணமானவர்
(4) உஸ்மானியப் பேரரசைப் பாதுகாத்தவர்
(5) முஸ்லிம் நாடு என்ற வகையில் துருக்கியில் 'ரீஆவை அமுலபடுத்தியவர்.

07 சரியான கூற்றைத் தெரிவு செய்க: இஸ்லாமிய நாகரிகம் எழுச்சி பெற்ற காலப்பகுதியில்

(1) வடமேற்கே பாரசீக நாகரிகமும் வடகிழக்கே உரோம நாகரிகமும் காணப்பட்டன.
(2) வடமேற்கே உரோம நாகரிகமும் வடகிழக்கே பாரசீக நாகரிகமும் காணப்பட்டன
(3) வடமேற்கே சிந்து நாகரிகமும் வடகிழக்கே பாரசீக நாகரிகமும் காணப்பட்டன
(4) வடமேற்கே உரோம நாகரிகமும் வடகிழக்கே மொஸபதேமிய நாகரிகமும் காணப்பட்டன
(5) வடமேற்கே எகிப்திய நாகரிகமும் வடகிழக்கே பாரசீக நாகரிகமும் காணப்பட்டன

- **பின்வரும் சொற்களை அடிப்படையாக வைத்து 6 முதல் 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

A - அபூ மூஸா அல்அ்'அரி    D - சைடியோ
B - முஆத் பின் ஜபல்    E - ஹுதைபா அல் யமானி
C - இமாம் தபரி    F - கொம்டே

08 வரலாற்றின் இடைக்காலத்தில் முஸ்லிம்கள் மட்டுமே நாகரிகத்தின் நாயகரகளாகத் திகழ்ந்தார்கள் எனக் கூறியவர்

(1) A (2) B (3) D (4) E (5) F

09 இவரைச் சுற்றியிருந்த அறிஞர் குழுவினர் ஜரீரிய்யூன்கள் என அழைக்கப்பட்டனர்.

(1) A (2) B (3) C (4) D (5) F

10 இரவில் அல்குர்ஆனை நீண்டநேரம் ஓதும் வழக்கம் உடையவர்

(1) A (2) C (3) D (4) E (5) F

11 ஸாஹிபுஸ்ஸிர் என அழைக்கப்பட்ட ஸஹாபி

(1) B (2) C (3) D (4) E (5) F

12 'அல்லாஹ்வின் தூதரின் தூதருக்கு அருள் புரிந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்' என்ற நபியவர்களின் கூற்றுக்குக் காரணமானவர்

(1) A (2) B (3) C (4) E (5) F

13 பின்வரும் விடயங்களைக் கருதுக

A - ஹதீஸ்கள் முஸ்னத் முறையில் நூலுருப்படுத்தப்பட்டன

B - ஹதீஸ்கள் முஸன்னப் முறையில் நூலுருப்படுத்தப்பட்டன

C - நடைமுறைப்படுத்தல் மூலம் ஹதீஸ்கள் பாதுகாப்பட்டன

D - இஸ்னாத் வழிமுறையை அறிமுகம் செய்தார்கள்

E - உஸுலுல் ஹதீஸ் எனும் கலை அறிமுகம் செய்யப்பட்டது.

F - கிதாபுன், பாபுன் என்ற தலைப்புக்களின் கீழ் ஹதீஸ்களைத் தொகுத்தார்கள்

மேற்கூறப்பட்டவற்றுள் தபஉத்தாபிஊன்கள் காலத்திற்கு மாத்திரம் உரிய செயற்பாடுகளைக் கொண்ட சேர்மானத்தை தெரிவு செய்க

(1) AEF (2) ACF (3) BCD (4) BEF (5) CDE

- பின்வரும் விடயங்களைக் கருதுக

A - மபாதிஹுல் கைப்

B - ரூஹுல் மஆனி

C - ஜாமிஉல் பயான்

D - அல்பஹ்ருல் முஹீத்

E - கராஇசுல் பயான்

F - பஹ்ருல் உலூம்

14 தப்ஸீர பில்ம∴ஸுர் வகை சார்ந்த தப்ஸீர

(1) AB (2) AD (3) BF (4) CE (5) CF

15 தப்ஸீர பிர்ர∴யி வகை சார்ந்த தப்ஸீர

(1) AB (2) CD (3) AD (4) BF (5) CE

16 தப்ஸீர சூபி வகை சார்ந்த தப்ஸீர்

(1) BE (2) BF (3) CD (4) CE (5) DE

17 ஹி 1447 ஆண்டிற்கான ஹஜ் பெருநாள் துல் க∴தா மாதத்தின் 29ஆம் நாள் முடிவுற்றதும் துல் ஹஜ் மாதத்திற்கான தலைப்பிறை தென்படாததால் அரபா உடைய தினம் 27ஆம் திகதி எனத் அ.இ.ஜ.உலமாவினால் தீர்மாணிக்கப்பட்டது. என்றாலும் சர்வதேசப் பிறை சார்பு சில உலமாக்களும் நட்சத்திரக் கணிப்பை பின்பற்றும் சில உலமாக்களும் 26 ஆம் திகதியையே அரபா நாளாகக் கொண்டனர். இலங்கையில் அதிகமான முஸ்லிம்கள் எதன் அடிப்படையில் 28ஆம் திகதி ஹஜ் பெருநாளைக் கொண்டாடினர்?

(1) கியாஸ் அத்னா (2) இஜ்மா அக்ஸரிய்யா (3) இஜ்மா சுகூதி

(4) இஸ்திஹ்ஸான் (5) கியாஸுல் முஸாவி

18 உமர் (ரழி) அவர்கள் மரணப்படுக்கையில் இருக்கும் நிலையில் அடுத்த கலீபா தெரிவாகும் வரை கலீபாவுக்காக கடமைபுரிந்தவர்

(1) ஸுஹைபுர் ரூமி (ரழி) (2) அபூதுஜான (ரழி) (3) அபூதல்ஹா (ரழி)

(4) ஸஃத் பின் ஸைத் (ரழி) (5) அலி (ரழி)

19 இஸ்னாதில் அறிவிப்பாளர் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும் ஹதீஸ் வகைகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி

(1) முஅல்லக், முர்ஸல், அரீப் (2) முர்ஸல், ஹஸன், அஸீஸ் (3) மவ்கூப், மஃஹூர், மக்பூல்

(4) மஃஹூர், ஸஹீஹ், ழஈப் (5) மஃஹூர், அஸீஸ், அரீப்

20 அல்ஹம்ரா மாளிகைக்குப் **பொருந்தாத** கூற்று

(1) இது மேற்கின் தாஜ்மஹால் என அழைக்கப்படுகிறது
(2) கிரனாடாவின் மலைச்சாரல் ஒன்றில் அமைந்துள்ளது
(3) 1ம் அப்துர்ரஹ்மான் இதை நிர்மாணித்தார்
(4) இதன் கட்டுமான வேலைகள் 1314ல் பூர்த்தியடைந்தது
(5) இதற்குப் பக்கத்தில் அழகிய அருவியொன்று பாய்ந்தோடுகிறது

21 கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவற்றின் பொருத்தமான தொடர்பைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

| | X | | Y |
|---|---|---|---|
| 1 | ரிபாதா | A | நீர்வழங்கல் |
| 2 | நத்வா | B | உணவு வழங்கல் |
| 3 | ஹிஜாபா | C | போருக்குத் தலைவை |
| 4 | லிவா | D | கஃபாவை பரிபாலித்தல் |
| 5 | ஸிகாயா | E | கலந்தாலோசனை |

(1) ACEDB (2) AEDCB (3) BEDCA (4) BEDA (5) CBEDA

21 இஸ்லாமிய நாகரிகத்தில் மொழிபெயர்ப்புப்பணியின் ஆரம்பம் பற்றிய சரியான கூற்றை தெரிவு செய்க

| | **முதல் மொழிபெயர்ப்பாளர்** | **மொழிபெயர்க்கப்பட்ட முதல் நூல்** | **அப்போதய ஆட்சியாளர்** |
|---|---|---|---|
| (1) | அப்துல்லாஹ் பின் முகப்பா | கலீலா வதிம்னா | மர்வான் பின் ஹகம் |
| (2) | ஹுஜ்ஜாஜ் பின் மதர் | அரிஸ்டோடில் எழுதிய தத்துவ நூல் | ஹாரூன் ரஷீத் |
| (3) | காலித் பின் யஸீத் | மருத்துவத்தின் கலைக் களஞ்சியம் | மன்ஸூர் |
| (4) | முஹம்மத் பின் பஸாரி | சிந்தாந்த | அமீன் |
| (5) | காலித் பின் யஸீத் | அஹரோன் பின் அப்பா எழுதிய மருத்துவ நூல் | அப்துல் மலிக்பின் மர்வான் |

23 கியாஸுல் அவ்லாவிற்கு மிகப் பொருத்தமான உதாரணம்

(1) ‘ஐஸ்’ எனும் போதைப் பொருள் பாவனை
(2) சிகரட், சுருட்டு, பீடி, புகையிலைப் பாவனை
(3) பன்றி நக்கிய ஒன்றை ஏழு முறை கழுவுதல்
(4) பெற்றோருக்கு சீ என்று கூறுதல்
(5) சுத்தம் செய்வதற்காக நீர் இல்லாத வேளையில் டிசுவைப் பாவித்தல்

24 உமர் (ரழி) அவர்கள் மரணப்படுக்கையில் இருக்கும் நிலையில் அடுத்த கலீபா தெரிவாகும் வரை கலீபாவுக்காக அஸ்மா பின்த் அபூபக்கர்(ரழி) தாதுன்னிதாகைன் என்ற சிறப்புப் பெயரைப் பெறுவதற்குக் காரணமாய் அமைந்த நிகழ்வு

(1) மக்கா வெற்றி (2) ஹுதைபியா உடன்படிக்கை (3) ஹிஜ்ரத்

(4) பத்ர் யுத்தம் (5) மி∴ராஜ்(ரழி)

25 தீனே இலாஹி என்ற கோட்பாட்டை அறிமுகம் செய்தவர், அதை எதிர்த்துப் போராடியவர் ஆகிய இருவரையும் முறையே தரும் விடை

(1) மன்னர் ஸாஜஹான் - இமாம் ஸிர்ஹிந்த்

(2) ம∴மூன் - இமாம் அஹ்மத்

(3) ஹாரூன் ரஷீத் - இமாம் ‘ாபி

(4) அக்பர் - இமாம் ஸிர்ஹிந்த்

(5) அக்பர் - ‘ாஹ்வலியுலலாஹ் தஹ்லவி

26 மஸ்லஹா அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுகளுக்கு உதாரணமாக **அமையாதது**

(1) அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டமை

(2) சிறைச்சாலைகள் உருவாக்கப்பட்டமை

(3) கால்நடைகளின் மாமிசம் உண்ண அனுமதிக்கப்பட்டுள்ளமை

(4) நாணயங்கள் வெளியிடப்பட்டமை

(5) ஹிஜ்ரி கலண்டர் அறிமுகம் செய்யப்பட்டமை

27 தொழுகைக்காக வுழூ செய்தேனா இல்லையா என்ற சந்தேகம் ஏற்பட்டால் புதிதாக வுழூ செய்து கொள்ள வேண்டும். இத்தீர்ப்புக்கு அடிப்படையாய் அமைந்த சட்டமூலாதாரம்

(1) இஜ்மா (2) கியாஸ் (3) மஸ்லஹா (4) இஸ்திஸ்ஹாப் (5) இஸ்திஹ்ஸான்

28 கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவற்றின் பொருத்தமான தொடர்பைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

| | X | | Y |
|---|---|---|---|
| 1 | வலவணி | A | அல்மைஸரா |
| 2 | இடவணி | B | அஸ்ஸாகர் |
| 3 | முன்னணி | C | அல்மைமனா |
| 4 | நடுவணி | D | அல்கல்ப் |
| 5 | பின்னணி | E | அலமுகத்திமா |

(1) ACEDB (2) CAEBD (3) BACDE (4) CAED (5) CBADE

29 மஸ்லஹா அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுகளுக்கு உதாரணமாக **அமையாதது**

(1) குடும்பத்தலைமையில் பெண்களுக்கு எந்தப் பங்கும் கிடையாது

(2) தலைமை ஆணுக்குரியது. ஆயினும் பெண்ணிடமும் ஆலோசனை கேட்க வேண்டும்.

(3) மனைவியின் கருத்துக்கு முரணாக நடப்பதே ஸுன்னாவாகும்

(4) உழைப்பில் ஈடுபடுவது ஆணுக்குரியது. பிள்ளை வளர்ப்பு பெண்ணுக்குரியது

(5) மேலே கூறப்பட்ட அனைத்தும் இஸ்லாமிய வழிகாட்டல்களாகும்.

30 ஜாஹிலிய்யாக் காலத்தில் இணைவைத்தலையும் ஏனைய ஜாஹிலிய்ய செயற்பாடுகளையும் தவிர்ந்து வாழ்ந்தோர்

(1) ஹனீப்கள் (2) ஸைதிகள் (3) அ்‘அரிகள்
(4) முராபித்கள் (5) மஜூஸிகள்

31 பௌத்தர்கள் உணவுக்காகவேனும் உயிரினங்கள் கொல்லப்படுவதை போயா தினத்தில் தம் சமயவிரோத செயலாகக் கருதுகின்றனர். முஸ்லிம்கள் அறுத்துப்பலியிடலை (உழ்கிய்யா) அய்யாமுத் த்‘ரீக்குடைய நாட்களில் மேலான வணக்கமாகக் கருதுகின்றனர். அய்யாமுத் த்‘ரீக் நாளொன்றில் போயா தினம் வந்தால் முஸ்லிம்கள் எவ்வாறு செயற்பட வேண்டும்?

(1) இரகசியமாக அறுத்துப் பலியிடல் (2) லஞ்சம் கொடுத்து அனுமதி பெறல்
(3) புரிந்துணர்வுடன் செயற்படல் (4) பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு அமைய செயற்படல்
(5) துணிச்சலுடன் கடமையை நிறைவேற்ற வேண்டும்

32 பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க

(1) இமாம் அபூஹனீபா ஹதீஸ் துறையில் பிரசித்தம் பெற்ற ஒருவராவார்
(2) அல் இபானா அன் உஸூலித் தியானா எனும் நூல் இமாம் அபூஹனீபாவின் வழிமுறைக்கமைய எழுதப்பட்டதாகும்.
(3) அல்குர்ஆனுக்கு முதன்முதலில் விளக்கமளித்தவர் இப்னு அப்பாஸ்(ரழி) ஆவார்
(4) அதிகமான ஹதீஸ்களை ரிவாயத் செய்த ஸஹாபி ஸைத் (ரழி) ஆவார்
(5) கர்பலா நிகழ்வின் காரணமாக ஷீஆப் பிரிவினர் நலிவடைய ஆரம்பித்தனர்.

33 பிக்ஹ் அடிப்படையில் நோக்கின் முதல் இடத்தைப் பெறும் ஹதீஸ் கிரந்தமாகக் கருதப்படுவது

(1) ஸஹீஹ் முஸ்லிம் (2) ஸுனன் அபூதாவூத் (3) ஜாமிஉத் திர்மிதி
(4) ஸுனனன் நஸாஈ (5) ஸுனன் இப்னு மாஜாஹ்

34 இஸ்லாமிய வரலாற்றில் முல்கியத் ஆட்சியை இஸ்தாபித்தவர் எனக் கருதப்படுபவர்

(1) உமர் (ரழி) (2) முஆவியா (ரழி) (3) யஸீத்
(4) அப்துல் மலிக் பின் மர்வான் (5) மன்ஸூர்

35 உமையா ஆட்சியின் இரண்டாவது நிர்மாணி என அழைக்கப்படுபவர்

(1) முஆவியா (ரழி) (2) யஸீத் (3) மர்வான் பின் ஹகம்
(4) அப்துல் மலிக் பின் மர்வான் (5) ஹஜ்ஜாஜ் பின் யூஸுப்

36 பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கருதுக.

| | X | | Y |
|---|---|---|---|
| 1 | அல்பைரூஸாபாதி (ரஹ்) | A | ஸஹாபாக்களின் தப்ஸீர் விளக்கம் மர்பூ.். தரத்தை சேர்ந்தவை எனக் குறிப்பிட்டவர் |
| 2 | இமாம் சர்கஸி (ரஹ்) | B | கூபாவில் தப்ஸீர் விளக்க வகுப்பை ஆரம்பித்து வைத்தவர் |
| 3 | இமாம் ஹாகிம் (ரஹ்) | C | அல்லாஹும் பக்கிஹ்ஹு பித் தீன். வஅல்லிம்ஹுத் த.்.வீல் எனப் பிரார்த்திக் கப்பட்டவர் |
| 4 | இமாம் இப்னுஅப்பாஸ் (ரழி) | D | அல்புர்ஹான் பீ உலூமில் குர்ஆன் எனும் நூலின் ஆசிரியர் |
| 5 | இப்னு மஸ்ஊத் (ரழி) | E | இப்னுஅப்பாஸ் (ரழி) அவர்களின் அல்குர்ஆன் விளக்கங்களை தொகுத்தவர் |

மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ள ஆளுமைகளின் ஒழுங்குக்கேற்ப அவர்கள் ஆற்றிய பங்களிப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?

(1) A D B C E (2) A B D E C (3) E C B A D (4) D E A C B (5) E D A C B

37 'நாங்கள் ஜாஹிலிய்யத்தில் சிக்கியிருந்தோம். விக்கிரகங்களை வணங்கினோம். இறந்த பிராணிகளின் மாமிசத்தைக்கூட உண்டுவந்தோம். எல்லா வகையான இழிசெயல்களையும் செய்து கொண்டிருந்தோம்... கேவலாமான எல்லா செயல்களையும் அவர் தடைசெய்தார். ஆதலால் அவரை விசுவாசம் கொண்டோம். அவரைப் பின்பற்றினோம்' மேலுள்ள உரைபற்றிய சரியான கூற்று

(1) ருஸ்தும் மன்னனிடம், அலி பின் அபீதாலிப், நபியவர்களைப் பற்றி,

(2) நஜ்ஜாஸி மன்னனிடம், ஜ.்.பர் பின் அபீதாலிப், நபியவர்களைப் பற்றி

(3) நஜ்ஜாஸி மன்னனிடம், ஸ.்.த் பின் அபீவக்காஸ், நபியவர்களைப் பற்றி

(4) யமன் நாட்டு மன்னனிடம், முஆத் பின் ஜபல், நபியவர்களைப் பற்றி

(5) பாரசீக மனனன் கிஸ்ராவிடம், ருபஆ பின் ஆமிர, நபியவர்களைப் பற்றி

38 மதீனாவில் நபியவர்கள் செய்துவைத்த சகோதரத்துவ உடன்படிக்கைக்கு அமைய அட்டவணையில் உள்ள x தரப்பினரதும் y தரப்பினரதும் சரியான தொடர்பைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

| | X | | Y |
|---|---|---|---|
| 1 | அபூபக்ர் (ரழி) | A | அவ்ஸ் பின்ஸாபித் (ரழி) |
| 2 | உஸ்மான் (ரழி) | B | மஆத் இப்னுஜபல் (ரழி) |
| 3 | ஜ.்.பர் இப்னு அபீ தாலிப் (ரழி) | C | காரிஜா இப்னு ஸைத் (ரழி) |

(1) ACB (2) ABC (3) BAC (4) CBA (5) CAB

39 பின்வருவனவற்றுள் கலீபா உமர்பின் அப்துல் அஸீஸ்(ரஹ்) அவர்களுக்குப் **பொருந்தாத** கூற்று

(1) உமையாக்களுக்கு இருந்த விஃேட சலுகைகளை நீக்கினார்

(2) கிலாபத் ஆட்சிமுறையைக் கொண்டுவர முயற்சித்தர்

(3) அல்குர்ஆனை ஒன்றுபடுத்தும் பணியைத் தீவிரப்படுத்தினார்

(4) வெளிநாட்டுப் படையெடுப்புக்களை முடிந்த அளவு தவிர்ந்து கொண்டார்

(5) அலகுர்ஆனின் (16:90) வசனத்தை குத்பாவில் ஓதும் மரபை அறிமுகம் செய்தார்

40 முஇஸ்ஸுத்தவ்லா, இமாமுத்தவ்லா, றுக்னுத்தவ்லா எனும் பட்டங்களைப் பெற்றவர்கள்

(1) புவைஹித்கள் (2) பாத்திமீக்கள் (3) மவாலீக்கள்
(4) மக்ஸுமிகள் (5) செல்ஜுக்கியர்

41 பின்வரும் விடயங்களைக் கருதுக

A - இவர் ஹி 4ல் நைஸாபூரில் பிறந்தார்

B - இஸ்ஹாக் பின் ராஹவைஹி, முஹம்மத் பின் யஹ்யா போன்றோரிடம் கற்றார்.

C - தான் திரட்டிய மூன்று லட்சம் ஹதீஸ்களில் நான்காயிரம் ஹதீஸ்களை தனது நூலில் தொகுத்தார்.

D - வரலாறு, குர்ஆன் விரிவுரை சார்ந்த 18 நூல்களை எழுதினார் வழிமுறையை அறிமுகம் செய்தார்கள்

E - ஹி. 261ல் மரணமானார்

மேற்கூறப்பட்ட தகவல்களுக்கப் பொருத்தமான இமாம்

(1) இமாம் புஹாரி (2) இமாம் முஸ்லிம் (3) இமாம் நவவி
(4) இமாம் இப்னுமாாமாஜா (5) இமாம் நஸாயி

42 பின்வரும் விடயங்களைக் கருதுக

A - ஒருவரையொருவர் சாடாது பரஸ்பரம் மதித்து நடக்க வேண்டும்

B - கருத்துவேறுபாடுகளைக் கவனியாது கருத்தொற்றுமையான விடயங்களில் இணைந்து செயல்பட வேண்டும்

C - சத்தியத்தைப் பேசுவோர் தனியாக பிரிந்து செயற்படுவதன் மூலமே அது வெற்றி பெறும்

D - பித்அத்வாதிகள் மேல் நல்லெண்ணம் கொள்வதை தவிர்ந்து கொள்ள வேண்டும்.

E - மார்க்கத்தைப் பின்பற்றுவதில் அதிதீவிரம் தவிர்க்கப்படல் வேண்டும்.

F - முன்னோர்களின் நடைமுறைகளுக்கு முரணானகப் பேசுவோரை ஒழிக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டவற்றுள் இஸ்லாமிய ஒழுக்க நெறிக்கு முரணாக உள்ள கருத்துக்களின் சேர்மானம்

(1) ADF (2) BCD (3) CDF (4) CDE (5) ADE

43 “நீங்கள் செய்யும் மருத்துவ சிகிச்சைகளுள் மிகச் சிறந்தவை இரத்தம் குத்தி வெளியேற்றுதலும்

(1) ஹிஜாமா செய்வதும் குத்ஸ் தாவரம் உண்பதும் அனைத்து நோய்களுக்கும் தீர்வாகும்.
(2) நபியவர்கள் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்
(3) நோய் ஏற்பட்டால் அதற்கு மருத்துவம் பார்ப்பது ஸுன்னத்தாகும்
(4) மூடநம்பிக்கைக்குப் பதிலாக நபியவர்கள் அறிவியல் பூர்வமாக வழிகாட்டியுள்ளார்கள்
(5) இது ஆரோக்கியமாக வாழ்வதற்கான நபியவர்களின் ஒரு வழிகாட்டலாகும்

44 பின்வரும் அட்டவணையைக் கருதுக

| | கலீபா | | உயர் அதிகாரி |
|---|---|---|---|
| 1 | வலீத் | A | பஸ்ல் பின் ரபீஆ |
| 2 | ஹாரூன் ரீத் | B | பஸ்ல் பின் ஸஹ்ல் |
| 3 | அமீன் | C | ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் |
| 4 | ம.்.மூன் | D | யஹ்யா பர்மகீ |

கலீபாக்களையும் அவர்களது உயர் அதிகாரிகளையும் தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடை

(1) ACBD (2) ACDB (3) BCDA (4) CDBA (5) CDAB

45 தொழுகைக்காக வுழூ செய்தேனா இல்லையா என்ற சந்தேகம் ஏற்பட்டால் புதிதாக வுழூ செய்து கொள்ள வேண ஒருமுறை ஜ.்.பர் பின அபீதாலிப் அவர்கள் நபியவர்களிடம் இருந்து தனக்கு மகிழ்வூட்டும் ஒரு செய்தியைக் கேட்டபோது துள்ளித் துள்ளி நபியவர்களைச் சுற்றி வந்தார்கள். இதைக் கண்டு சிறித்த நபியவர்கள் இது என்ன எனக் கேட்டார்கள். அதற்கு ஜ.்.பர் ஹபீயர் இவ்வாறு தான் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். எனக்கூறினார். ஜ.்.பர்(ரழி) இன் செயலை நபியவர்கள் தடுக்கவில்லை. இச்சம்பவத்தை எந்த சட்டமூலாதாரத்திற்கு ஆதாரமாகக் கொள்ளலாம்?
டும். இத்தீர்ப்புக்கு அடிப்படையாய் அமைந்த சட்டமூலாதாரம்

(1) இஜ்மாஉ (2) கியாஸ் (3) உர்ப (4) இஸ்திஹ்ஸான் (5) இஸ்திஸ்ஹாப்

- 46 தொடக்கம் 50 வரையிலுள்ள ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுளனை அச்சோடி பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பை எடுத்துக்காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க

| இல | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | சரியானது |
| 2 | பிழையானது | சரியானது |
| 3 | சரியானது | பிழையானது |
| 4 | பிழையானது | பிழையானது |
| 5 | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விவரிக்கிறது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| 46 | நான்கு மத்ஹப்களின் இமாம்களுக்குப் பின் இஜ்திஹாத் செய்யும் ஆற்றல் கொண்ட அறிஞர்கள் எவரும் வரவில்லை. | இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டது என்ற நம்பிக்கையின் பரவலால் முஸலிம் உலகம் தேக்க நிலையை அடைந்தது. | |
| 47 | ஹிஜ்ரத்தின் பின்னர் நபியவர்கள் தனிமனித உருவாக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. | ஹிஜ்ரத்தின் பின்னர் அருளப்பட்ட இறைவசனங்கள் பெரும்பாலும் சமூக அமைப்பை மையப்படுத் தியவைகளாகவே இருந்தன. | |
| 48 | அனைத்து நபிமார்களுக்கும் வழங்கப்பட்ட தீன் ஒன்றாகவும் 'ரீஆ வேறுபட்ட அமைப்பிலும் காணப்பட்டன. | தீன் காலத்தால் மாறுபடக் கூடிய வழிகாட்டல்களை உள்ளடக்கியது.. 'ரீஆ என்றும் மாறாத நம்பிக்கைகளைப் போதிக்கிறது. | |
| 49 | நபியவர்கள் தனது மக்காக் காலகட்டத்தில் அகீதாவை மட்டுமே போதித்தார்கள் | மதீனாவுக்கு வந்ததும் நபியவர்கள் செய்த முதல் வேலை குறைஷியர்க்கு எதிராக பலமான ஒரு படையை தயார் செய்தமையாகும். | |
| 50 | ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காணப்படும் உடல் உள பாலூக்க வேறுபாட்டுக்கு அமைய கணவன் மனைவி ஆகிய இருவரினதும் உரிமைகளும் கடமைகளும் வேறுபடுகின்றன | அல்லாஹ் ஆண்களை என்ன மூலத்தில் இருந்து படைத்தானோ அதே மூலத்தில் இருந்துதான் பெண்ணையும் படைத்தான். | |